Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JUNE 10, 2021

வியாழக்கிழமை ஜூன் 10, 2021 | ஒளி: 07 கதிர்: 18 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# ‘12 சதவீதம் தொற்று; 28 சதவீதம் மரணம்’



## பயணக் கட்டுப்பாடுகளை கடுமையாக்க கோரிக்கை

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை நூற்றுக்கு 12 சதவீதத்தாலும், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரின் எண்ணிக்கை 28 சதவீதத்தாலும்

தொடர்ச்சி P2



## எங்கள் மக்கள் சக்தியின் தேசிய பட்டியலில் மாற்றம்

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்தன தேரர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதன் பின்னர், பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர், தேசிய பட்டியலின் ஊடாகப் பாராளுமன்றத்துக்கு வரவுள்ளார் என அக்கட்சியின் தலைவர் சமன் பெரேரா தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

# ‘ரணிலின் தோளில் தொங்கி எதிரணியை சரிக்க முயற்சி’

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பாராளுமன்றத்துக்கு வருவதால், அரசாங்கமே அதிகமாக மகிழ்ச்சியாக இருக்கிறதெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, ரணிலில் தோளில் தொங்கியாவது எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்திவிட்டு, தம்மைப் பலமாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ச்சி P2



## நீதித்துறையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பேரவை இணக்கம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரான நீதியரசர் அர்ஜுன் ஒபேசேகரவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்குமாறு ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட பரிந்துரைக்கு பாராளுமன்ற பேரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் சிசிர.ஜே.டி.ஆப்ரூ ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையிலேயே, ஜனாதிபதி இந்தப் பரிந்துரையை மேற்கொண்டிருந்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற பேரவைக் கூட்டத்திலேயே இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தொடர்ச்சி P2



## ‘உர இறக்குமதித் தடையால் நாட்டில் பஞ்சம் ஏற்படாது’

ஆரோக்கியமான உணவுகள் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமெனத் தெரிவித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவரான வைத்தியர் அநுருத்த பாதெனிய, இந்த இரசாயன உர இறக்குமதியால் நாடு பஞ்சத்தை எதிர்கொள்ளுமென பலர் அஞ்சுவதாகத் தெரிவித்த அவர், அவ்வாறான எந்தவொரு விடயமும் எமது நாட்டில் இடம்பெறாது என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (9) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்துரைக்கையில், “உலக ஆய்வின் பிரகாரம் எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகளின் ஆயுட்காலம் தற்போதைய தலைமுறையை விட குறைவாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அதற்கமைய 2025ஆம் ஆண்டு பிறக்கும் குழந்தைகளின் ஆயுட்காலம் 40-45 வருடத்துக்கு இடையிலேயே காணப்படும்” என்றார். தொடர்ச்சி P2

## செந்தில் தொண்டமானின் முயற்சியால் பி.சி.ஆர் இயந்திரம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப- தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமானின் முயற்சியால், பி.சி.ஆர் இயந்திரமொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



## அஸ்ட்ராசெனகாவுக்கு ஜப்பான் பச்சைக்கொடி

ஆறு இலட்சம் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளைப் பெற்றுத்தருமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜப்பான் பிரதமர் யொசிஹிடே சுகாவிடம் (Yoshihide Suga) முன்வைத்த கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்கப்பெற்றுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



### புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வசிப்போருக்கு

## ‘மலசல கூடங்களை கட்டிக்கொடுக்க முடியாது’

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு, சொந்தக்காணி இல்லாத காரணமாகவே, மலசலகூடம் கட்டிக்கொடுக்க முடியாமல் இருப்பதாக, உடுவில் பிரதேச செயலாளர் எஸ்.முகுந்தன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஓய்வுபெற்ற தாதியர்களின் சேவையைப் பெற நடவடிக்கை

### பிரதமர் பரிந்துரை: துரித பயிற்சித் திட்டத்துக்கும் ஆலோசனை

ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சிக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

தாதியர் சேவையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று (09) அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே, பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2



### வவுனியா வளாகம் தரமுயர்வு:

## ‘தொடர் முயற்சிக்கு கிடைத்த வெற்றி’



■ க. அகரன்

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் தரமுயர்த்தப்பட்டமையானது, தமது தொடர் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகுமென, பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தொடர்ச்சி P2

## ரஜீவ் யசிரு பிணையில் விடுதலை

இணையத்தளங்களில் போலியான செய்திகளை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ், ஜூன் 8ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ரஜீவ் யசிரு குருவிட்டகே, கொழும்பு பிரதம நீதவானால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் அவர், நேற்று (09) விடுதலை செய்யப்பட்டார்.

ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார அமைச்சு உள்ளிட்ட அரச நிறுவனங்களின் இணையத்தளங்கள் ஊடுருவப்பட்டுள்ளதாக சந்தேகநபரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டதை அடுத்தே, அவர் கைது செய்யப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டதைப் போல, ஜனாதிபதி செயலகம் அல்லது ஏனைய அரச நிறுவனங்களின் உத்தியோகபூர்வ இணையதளங்கள் சந்தேகநபரால் ஊடுருவப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

## ‘அதிர்ஷ்டம் இருந்தால் நாமல் பிரதமர் ஆவார்’



2022இல் நாட்டின் பிரதமராகும் அதிர்ஷ்டம் இருந்தால் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு அப்பதவி கிடைக்குமெனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, சிலருக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது. துரதிர்ஷ்டத்தால் இன்னும் சிலர், அரசியலிலிருந்து வெளியேறியுள்ளனர் என்றார். பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் தொடர்ச்சி P2

## நீடிப்பு

பல்கலைக்கழகங்களில் 2020-2021 கல்வியாண்டுக்காக, மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி, ஜூன் 18 வரை நீடிக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

UNIVERSITY GRANTS COMMISSION - SRI LANKA

## இணையத்தளத்தின் ஊடாக சிறுமியை விற்றவர் கைது

பாலியல் நடவடிக்கைகளுக்காக 15 வயதான சிறுமியை இணையத்தளத்தினூடாக விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், 35 வயதான ஒருவர் கல்கிசை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

## ‘ஜனாதிபதியாவதற்கு ரணிலுக்கு ஒன்று போதும்’



வெறுமனே, 40 ஆசனங்களுடன் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரேயோர் ஆசனத்தை வைத்துக்கொண்டும் ஜனாதிபதியாவதற்கு அவருக்கு வல்லமை உள்ளதெனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரான வஜிர அபேவர்தன, அரசியல் அறிவியலுக்கு அமைய அது முடியும் என்றார்.

“அரசியலில் அனுபவம் வாய்ந்த ரணில் விக்கிரமசிங்க, சகலரையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதற்காகவே பாராளுமன்றத்துக்குச் செல்கிறார்” என்றும் அவர் தெரிவித்தார். இணையவழியில், நேற்று (09) இடம்பெற்று தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## எங்கள் மக்கள் சக்தியின் தேசிய பட்டியலில் மாற்றம்

மூன்று மாதங்கள் மாத்திரமே பாராளுமன்ற உறுப்பினராக இருக்கப்போவதாகவும் அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஞானசார தேரருக்கு வழங்க உள்ளதாகவும் ரத்தன தேரர் உறுதியளித்திருந்தார்.

**மூன்று மாதங்கள் மாத்திரமே பாராளுமன்ற உறுப்பினராக இருக்கப்போவதாகவும் அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஞானசார தேரருக்கு வழங்க உள்ளதாகவும் ரத்தன தேரர் உறுதியளித்திருந்தார்**

இந்நிலையில், "இது ஒரு பிரச்சினை இல்லை. ரத்தன தேரர் ஆறு மாதங்கள் வேண்டுமென்றாலும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கட்டும்" என்று ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அத்துரலிய ரத்தன தேரர் பதவி விலகியதன் பின்னர், ஞானசார தேரரரை தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பதற்குத் தயாராக இருப்பதாக எங்கள் மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# 'ரணிலின் தோளில் தொங்கி எதிரணியை சரிக்க முயற்சி'

நெருக்கடிக்குள் வீழ்ந்துள்ள அரசாங்கம் அதிலிருந்து மெலெழுப்புவதற்கு, ரணிலின் ஒத்துழைப்பை பெறுவதற்கு முயற்சிக்கின்றதா என்ற கேள்வியும் எழும்புகிறது எனத் தெரிவித்த அவர், ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற பிரவேசம், எதிர்க்கட்சியை பலவீனப்படுத்துமென்றும், இரண்டாக பிளவுப்படும் எனவும், அரசாங்கம் பகலிரவு கனவு காண்கிறது என்றார்.

எனவே, ரணிலைப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்த அவர், ஏனெனில், இராஜதந்திர தொடர்பு மற்றும் அரசியல் அனுபவமுள்ள அவர், (ரணில்) அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினாலும் எமக்கு பிரச்சினையில்லை ஏனெனில், எதிர்க்கட்சி பலவீனமடையாது என்றார்.

தடைகளுக்கு மத்தியில்தான் பிரேமதாச ஜனாதிபதியானார் அவருக்கு 'வர்க்க' பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. கொழும்பு 7இல் இருந்து அவர், வரவில்லை. அவர் வாழைத்தோட்டத்தைச் சேர்ந்தவர். அவர் 'மேற்குடி' குடும்பத்தைச் சேர்ந்தவர் இல்லை.

எனவே, இந்த நாட்டின் தலைவராக சஜித் வந்துவிடக்கூடாதென கனவில் நினைக்கும் மேற்குடியைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். அதனை உண்மையாக்குவதற்கே, அந்தந்த தரப்பினர் தற்போது நிபந்தனைகளின்றி அரசாங்கத்துடன் இணைகின்றனர் என்றார். ரணிலை, எதிர்க்கட்சித் தலைவராக்க வேண்டுமென நினைக்கின்றனர். அதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றனர் எனத் தெரிவித்த அவர், ரணிலை அரசாங்கமா வழிநடத்துகின்றது என்ற சந்தேகம் அமைச்சர் மஹிந்தானந்தவின் பாராளுமன்ற உரையிலிருந்து தெளிவாகிறது. ஆனாலும் அவர்களின் திட்டம் வெற்றியடையாது என்றார்.

## '12 சதவீதம் தொற்று; 28 சதவீதம் மரணம்'

அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதத்தின் மூலமாக தெளிவுப்படுத்தியுள்ளது. அத்துடன், தற்போது அமுலில் இருக்கும் பயணக் கட்டுப்பாடுகளை இன்னுமின்னும் கடுமையாக்குமாறும் அச்சங்கம் அக்கடிதத்தின் ஊடாக கேட்டுக்கொண்டுள்ளது.

**தற்போது அமுலில் இருக்கும் பயணக் கட்டுப்பாடுகளை இன்னுமின்னும் கடுமையாக்குமாறும் அச்சங்கம் அக்கடிதத்தின் ஊடாக கேட்டுக்கொண்டுள்ளது**

நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், தொற்றால் இறப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால், தற்போது அமுலில் உள்ள பயணக்கட்டுப்பாட்டை இன்னும் கடுமையாக்கப்பட வேண்டும். தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதால், வைத்தியசாலைகள் நிரம்பியுள்ளன. இந்நிலைமை தொடர்ந்தால் தொற்றாளர்களை வைத்தியசாலைகளில் அனுமதிக்க முடியாத நிலை ஏற்படும் என்றும் அச்சங்கம் எச்சரித்துள்ளது. அஸ்ட்ராசெனக்காவின் இரண்டாவது டோஸை செலுத்துவதற்கு 6 இலட்சம் டோஸ்கள் தேவைப்படுகிறது. குறித்த காலப்பகுதிக்குள் அதனை செலுத்த வேண்டும் எனவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது என்றும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தடுப்பூசிகளை செலுத்தும் பணிகளின்போது, இரண்டாவது டோஸ்களை காலத்தாமதமின்றி பெற்றுக்கொள்வதற்கு ஸ்தீரமான முறையொன்று பின்பற்றப்பட வேண்டும். அதுமட்டுமன்றி வேறு நோய்களுக்கான சிகிச்சைகளுக்காக வருவோருக்கு வழங்க வேண்டிய மருந்துகளை அரச வைத்தியசாலைகளுக்கு பெற்றுக்கொடுப்பதும் முக்கியமானதாகும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'உர இறக்குமதி தடையால் நாட்டில் பஞ்சம் ஏற்படாது'

2008ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வொன்றுக்கு அமைய, இலங்கையில் 20 சதவீதமானவர்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர். நீரிழிவு நோய் கூட இலங்கையில் வேகமாக அதிகரித்து வருகின்றது என்றார்.

1970ஆம் ஆண்டு பசுமை புரட்சியுடன் இலங்கையில் விஷ உணவுகள் ஆரம்பமானது என்றும் மேற்கத்தையே நாடுகளுக்கு இணைவாக ஆசிய வலய நாடுகளின் குழந்தைகளின் உயிரிழப்பு 5 மடங்காக அதிகரித்துள்ளது என்றார்.

கடந்த காலங்களில் உணவை விட உடற்பயிற்சி முக்கியமானது என்ற எண்ணப்பாட்டில் மக்கள் இருந்தாலும் அது தற்போது தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுவதுடன், உணவு மற்றும் உடற்பயிற்சியில் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்த அவர், தேவையற்ற உணவுப் பழக்க வழக்கங்கள் எம்மக்களிடையே தோன்றியுள்ளதுடன், தற்போது நாட்டுக்குள் தவறான உணவுக் கலாசாரமும் உருவாகியுள்ளது என்றார்.

65 வருடமாக விஷ உணவை உட்கொண்ட மோசமான உணவுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான காலம் உருவாகியுள்ளதென தெரிவித்த அவர், இரசாயன உர இறக்குமதியை தடை செய்து, சேதன உரத்தை நாட்டுக்குள் பிரபல்யப்படுத்துவதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை பாராட்ட வேண்டும் என்றார்.

## அஸ்ட்ராசெனகாவுக்கு ஜப்பான் பச்சைக்கொடி

ஜனாதிபதிக்கும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் சுகியாமா அக்கிராவுக்கும் (Sugiyama Akira) இடையில், நேற்று (09) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, இது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

கொவிட் வைரஸ் தொற்றொழிப்பு, மருத்துவ மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்கு ஜப்பான் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

சமுத்திர அனர்த்தம் தொடர்பில் விரைவாகப் பதிலளிப்பதற்குத் தேவையான தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும்

**கொவிட் வைரஸ் தொற்றொழிப்பு, மருத்துவ உபகரணங்களை வழங்குவது தொடர்பில் ஜப்பான் அரசாங்கம் இணக்கம்**

ஜனாதிபதி, ஜப்பான் தூதுவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

ஜப்பான் தூதுவர் அலுவலகத்தின் பிரதித் தூதுவர்கித்தமுராடொசிகிரோ (Kitamura Toshihiro), முதலாவது செயலாளர் இமமுரா காயோ (Imamura Kayo), ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இச்சந்திப்பின்போது கலந்துகொண்டிருந்தனர்.

## செந்தில் தொண்டமானின்...

அந்த இயந்திரம், சுகாதார அமைச்சின் பரிந்துரைக்கமைய தியத்தலாவை வைத்தியசாலைக்கு வழங்கப்படவுள்ளது. சுமார் 65 இலட்சம் ரூபாய் பெறுமதியான இந்த பி.சி.ஆர் இயந்திரம், இந்தியாவின் நிரு டயமன்ட் கடர்ஸ் நிறுவனத்தால், இலங்கைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

**இயந்திரம், சுகாதார அமைச்சின் பரிந்துரைக்கமைய தியத்தலாவை வைத்தியசாலைக்கு வழங்கப்படவுள்ளது**

அந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சஞ்ஜய பெட்டினால், இந்த இயந்திரத்துக்கான ஆவணங்களும் இயந்திரமும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரிமாளிகையில் வைத்துக் கையளிக்கப்பட்டுள்ளன.

## நீதித்துறையில் வெற்றிடங்களை...

கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கபீர் ஹாசிம் எம்.பி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் ஏற்படும் வெற்றிடத்துக்கு நீதிபதி கே.பி. பெர்ணான்டோவை நியமிப்பதற்கு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் பாராளுமன்ற பேரவை இணக்கம் தெரிவித்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக தெரிவித்தார்.

**மேல் நீதிமன்றத்தின் நீதிபதி சஷி மஹேந்திரனை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் அரசியலமைப்புப் பேரவை தனது இணக்கத்தைத் தெரிவித்திருக்கிறது**

அதேநேரம், நீதிபதி கே.பி. பெர்ணான்டோவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவதால் ஏற்படும் வெற்றிடத்துக்கு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி சஷி மஹேந்திரனை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் அரசியலமைப்புப் பேரவை தனது இணக்கத்தைத் தெரிவித்திருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதேநேரம், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படும் வெற்றிடத்துக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.ரி.பி. தெனிதெனியவை நியமிப்பதற்கும் இங்கு இணங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## 'மலசல கூடங்களை கட்டிக்கொடுக்க...

புன்னாலைக்கட்டுவான் - கப்பன்புலவு பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர், வீட்டில் மலசலகூட வசதிகள் இல்லாத காரணத்தால், வீட்டுக்கு சற்று தொலைவில் உள்ள பனங்காணிக்குச் சென்று, காலைக்கடனை முடித்து விட்டு, வீடு திரும்புகையில் இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டனர் என, நேற்று முன்தினம் (08) செய்தி வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த பிரதேச செயலாளர் எஸ்.முகுந்தன் , கப்பன்புலவு பகுதியில், சுமார் 25க்கும் மேற்பட்ட குடும்பங்கள், அவர்களுக்கு உரித்தில்லாத காணிகளில் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

'சுற்று நிரூபங்களின் பிரகாரம், காணி உரித்துடையவர் அல்லாதோருக்கு அல்லது காணி உரிமையை உறுதிப்படுத்தாதவர்களுக்கு கட்டடத்துக்கான உதவிகளை செய்ய முடியாது. அதனாலேயே அவர்களுக்கான மலசல கூடங்களை கட்டிக்கொடுக்க முடியவில்லை' என்றும், அவர் கூறினார்.

காணியின் உரிமையாளர் அங்கு வசிக்கும் மக்களுக்கு காணிகளை பகிர்ந்து அளிப்பதன் ஊடாகவோ அல்லது அங்கு வசிப்போர் தமது காணிக்கான உரித்தை உறுதிப்படுத்துவார்களாயின், அவர்களுக்கு மலசலகூட வசதிகளை செய்து கொடுப்பதற்கு தாம் தயாராகவே இருப்பதாக, உடுவில் பிரதேச செயலாளர் எஸ்.முகுந்தன் மேலும் தெரிவித்தார்.

## 'தொடர் முயற்சிக்கு...

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம், தரமுயத்தப்பட்டு, இலங்கை வவுனியா பல்கலைக்கழகமென அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரீஸின் கையொப்பத்துடன் நேற்று (08) வெளியிடப்பட்டுள்ளது" என்றார்.

இதன்படி, 'யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம்' என்ற பெயர், எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதியுடன் நீக்கப்பட்டு, ஒகஸ்ட் மாதம் 1ஆம் திகதி முதல் 'வவுனியா பல்கலைக்கழகம்' என அழைக்கப்படுமெனத் தெரிவித்த அவர், இது தமது தொடர் முயற்சிக்கு கிடைத்த அளப்பரிய வெற்றியாகுமென்றும் கூறினார். யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தை, வவுனியா பல்கலைக்கழகமாக தரமுயர்த்த வேண்டுமெனும் தூரநோக்கோடு செயற்பட்ட போது, தனது தொடர் முயற்சிக்கு பக்கபலமாக

**'யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம்' என்ற பெயர், எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதியுடன் நீக்கப்பட்டு, ஒகஸ்ட் மாதம் 1ஆம் திகதி முதல் 'வவுனியா பல்கலைக்கழகம்' என அழைக்கப்படும் என அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரீஸின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது**

இருந்த அத்தனை நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகத் தெரிவித்தார்.

அத்துடன், 'ஒகஸ்ட் 1ஆம் திகதிக்கு பின்னர் வவுனியா பல்கலைக்கழகமானது, தெரிவுசெய்யப்பட்ட கற்கை நெறிகளில் விசேடத்துவத்தை அபிவிருத்தி செய்யும் இயல்திறனுடன் திடமான ஓர் அடிப்படையைக் கொண்ட கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும், காதர் மஸ்தான் எம்.பி கூறினார்.

## ஓய்வுபெற்ற தாதியர்களின் சேவையை பெற நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் சுமார் 34,000 தாதியர்கள் தாதியர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் இதுவரை முகங்கொடுத்துள்ள குறுகிய மற்றும் நீண்டகால தீர்வு காணல் மற்றும் முன்மொழிவுகள் குறித்துக் கலந்துரையாடுவதே இச்சந்திப்பின் நோக்கமாகும்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச்.முனசிங்க, இதுவரை 840 தாதியர்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சேவையாற்றுவதற்கான குறுகிய கால பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. சுமார் 1,000 பேருக்கு துரித பயிற்சி வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதாகவும் இதன்போது தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு, சுகாதார அமைச்சருக்கு இதன்போது தெரிவித்த பிரதமர், தாதியர்களின் சேவை காலத்தை நீடிப்பது குறித்த செயற்பாட்டின் தற்போதைய நிலை குறித்தும் வினவினார்.

தாதியர்களின் சேவை காலத்தை 63 ஆண்டுகள் வரை நீடிப்பது தொடர்பான அமைச்சரவை பத்திரம் ஏற்கெனவே அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச்.முனசிங்க

**ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு, சுகாதார அமைச்சருக்கு இதன்போது தெரிவித்த பிரதமர், தாதியர்களின் சேவை காலத்தை நீடிப்பது குறித்த செயற்பாட்டின் தற்போதைய நிலை குறித்தும் வினவினார்**

இதன்போது தெரிவித்தார்.

கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதார சேவையில் ஈடுபடும் அனைவரும் இதுவரை சிறப்பாக சேவையாற்றி வருவதாக தெரிவித்த பிரதமர், அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் வினவினார்.

சுகாதாரத் துறையில் அனைவருக்கும் இதுவரை தடுப்பூசி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது குடும்ப உறுப்பினருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் தாதியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொடுக்க முறையான செயற்பாடொன்றை வகுக்குமாறும் அதிகாரிகளுக்கு பிரதமர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

## 'அதிர்ஷ்டம் இருந்தால் நாமல்...

நேற்று (9) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா தொற்று ஏற்படுமென யாருமே நினைக்கவில்லை. அதேபோல, எதிர்பாராத நிலைமைகள் கூட ஏற்படலாம் என்றார்.

நாமல் ராஜபக்ஷ, இரண்டாவது தடவையாகவும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டவர் என்பதுடன், சட்டத்தரணியாகவும் சிறந்த கல்வித் தகைமைகளும் உள்ளதால் அவருக்கு எந்தச் சந்தர்ப்பத்தில் அதிர்ஷ்டம் கிட்டுமெனக் கூறமுடியாது என்றார்.

## இணையத்தளத்தின் ஊடாக சிறுமியை விற்றவர்...

அங்குள்ள வாடகை வீடொன்றில் சிறுமியை தடுத்துவைத்து, இணையத்தளத்தில் சிறுமியின் நிழற்படத்தை பிரசுரித்து, பாலியல் செயற்பாடுகளுக்காக விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தெல்கொட பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுமி ஒருவரே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது அத்துடன், அச்சிறுமியின் தாயிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர், மொரடுவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுமியை பாலியல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தியவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

## 'ஜனாதிபதியாவதற்கு ரணிலுக்கு...

ஊடகவியலார் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கு தேவையான முன்னேற்பாடுகளை அரசாங்கம் உரிய முறையை செயற்படுத்தாமையால், 20 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்த அவர். இதற்காகவும் ஐக்கிய தேசியக் கட்சி வருந்துகின்றது என்றார்.

# ரஷ்யாவுக்கு இலங்கை பாராட்டு

ரஷ்யக் கூட்டமைப்பின் வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உடனான தொலைபேசி உரையாடலின் போது, கொரோனா தொற்று நோயால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதில், இலங்கைக்கு ரஷ்யா நல்கிய ஆதரவுகளுக்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலிலேயே தினேஷ் குணவர்தன இவ்வாறு பாராட்டியுள்ளார். இலங்கையில் நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்துக்கு ஆதரவுகளை வழங்கும் முகமாக, ஸ்புட்னிக் வி தடுப்பூசியை வழங்கிய, ரஷ்யாவின் உதவி, மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில், இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆதரவுகளுக்காக, ரஷ்யாவுக்கு இலங்கையின் பாராட்டுகளையும் இதன்போது தெரிவித்துக் கொண்டார்.

இரு வெளிநாட்டு அமைச்சுகளினதும் கட்டமைப்புக்குள் திட்டமிடப்பட்டுள்ள இருதரப்பு ஆலோசனைகள் மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஆணைக்குழு ஆகியன குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.



# மனைவி மரணித்து இரு வாரங்களில் கணவரும் உயிரிழப்பு

### காலியில் சோகம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நிமோனியா காரணமாக மனைவி உயிரிழந்து, இருவாரங்களுக்குப் பின்னர், கணவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த சோகமான சம்பவமொன்று காலியில் பதிவாகியுள்ளது.

காலி - ரிச்மன்டிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 70 வயதுடையவரே, இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது மனைவி, கடந்த மாதம் 20ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்திருந்தார்.

இதன் பின்னர் உயிரிழந்தவரின் பெண்ணின் கணவர், மகன், மருமகள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டதோடு, இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனை முடிவுகள் இம்மாதம் 6ஆம் திகதி வெளியாகியிருந்தன.

பி.சி.ஆர் பரிசோதனை வெளியாகிய மறுநாளே (07) உயிரிழந்த பெண்ணின் கணவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு, மயக்கமடைந்து கீழே விழுந்து வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி நிமோனியா காரணமாக உயிரிழந்துள்ளதாக கராப்பிட்டி போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் உறுதி செய்துள்ளனர்.

## குழந்தைகளுக்கு தொடர் காய்ச்சலா?

# உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லவும்



மூன்று நாள்களுக்கும் அதிகமாக காய்ச்சல் காணப்படுமாக இருந்தால், உடனடியாக பிள்ளைகளை வைத்தியர்களிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்குக் காய்ச்சல், கொரோனா வைரஸ் தொற்று ஆகிய இரண்டுக்கும் காய்ச்சலே பொதுவான அறிகுறியெனத் தெரிவிக்கும் அவர், நாட்டில் ஏற்பட்டிருக்கும் மோசமான காலநிலையால், குழந்தைகளுக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதோடு, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் நிலைமையும் காணப்படுவதாகவும் எச்சரித்துள்ளார்.

இதனால், காய்ச்சல் ஏற்படும் குழந்தைகளை உடனடியாக வைத்தியரிடம் அழைத்துச் சென்று பரிசோதிப்பது அவசியமெனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# 'ஓய்வுபெற்ற தாதியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்க'

### சுகாதார அமைச்சுக்குப் பிரதமர் ஆலோசனை



ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்து கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தாதியர் சேவையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர், மேல் மாகாண பிரதான சங்கநாயக்கர் முறுத்தெட்டுவே ஆனந்த தேரரின் வேண்டுகோளுக்கமைய அலரி மாளிகையில் நேற்று (09) சுகாதார அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா, தற்போது ஓராண்டுப் பயிற்சிக்காக 2,000 எனும் குறைந்த எண்ணிக்கையிலான தாதியர்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்

இதேவேளை, தற்போது அப்பிரிவுகளில் சேவையாற்றும் பயிற்சி பெறாத தாதியர்களை, குறித்த பிரிவுகளில் சேவையாற்றும் காலத்தை பயிற்சி காலத்துடன் சேர்க்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

மேலும் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச்.முனசிங்க, இதுவரை 840 தாதியர்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சேவையாற்றுவதற்கான குறுகிய கால பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 1,000 பேருக்கு துரித பயிற்சி வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

## 50 மீற்றர் தூரத்துக்கு

# தடம் புரண்டது அம்பியூலன்ஸ்

### சாரதி கவலைக்கிடம்

களுத்துறை வஸ்கடுவே, கொரோனா வைரஸ் சிகிச்சை மத்திய நிலையத்திலிருந்து, நாராஹேன்பிடியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்குப் பி.சி.ஆர் பரிசோதனை மாதிரிகளை எடுத்துச் சென்ற அம்பியூலன்ஸ் வண்டி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது சாரதி கடும் காயத்துக்குள்ளானார்.

இந்த விபத்தில், அம்பியூலன்ஸ் சாரதி காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கும் பொலிஸார், விபத்துக்குள்ளான அம்பியுலன்ஸ் வண்டி, சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு தடம் புரண்டு சென்றதாக விபத்தைப் பார்த்தவர்கள் கூறியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்துக்குள்ளாகி காயமடைந்த அம்பியூலன்ஸ் சாரதி, கலுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது நிலைமை கவலைக்கிடமையானது, எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மேயரின் பிறந்தநாள் நிகழ்வு;

# இரு ஊடகவியலாளர்களிடம் இன்று வாக்குமூலம்


பயணக்கட்டுப்பாடு விதிகளை மீறி, குருநாகல் நகர சபையின் மேயரின் பிறந்தநாள் நிகழ்வுக்கு, செய்தி சேகரிப்புக்காகச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் இருவரிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் தொலைக்காட்சியில் கடமையாற்றும், இரு ஊடகவியலாளர்களையும் குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்துக்கு இன்று (10) அழைக்கப்பட்டு, வாக்குமூலங்கள் பெறப்பட உள்ளன.

மேயரின் பிறந்தநாள் நிகழ்வுக்கு குறித்த இரு ஊடகவியலாளர்களும் வீடியோ எடுத்திருந்ததோடு, அவர்கள் பணிபுரியும் தொலைக்காட்சிகளும் இந்த வீடியோக்கள் வெளியாகியிருந்தன.

இதேவேளை, பிறந்தநாளைக் கொண்டாடிய, குருநாகல் மேயர் துஷார சஞ்சீவ விதாரவின் மனைவி தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டிருந்த குருநாகல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் திஸாநாயக்க தற்போது ஒழுக்காற்று நடவடிக்கைக்காக குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண் சிகிச்சையாளரின் மருந்துப் பொருள்கள் தபாலில் வரும்




கொழும்புத் தேசிய கண் வைத்தியசாலையின் கண் சிகிச்சை நோயாளர்களுக்குத் தேவையான மருந்துப்பொருள்கள் தபாலூடாக வீடுகளுக்கே அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளதால், கண் சிகிச்சை நோயாளர்களுக்கு, தபால் ஊடாக மருந்துப் பொருள்களை அனுப்பும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமெனவும், மருந்துகளைப் பெற வேண்டிய கண் நோயாளர்கள் வைத்தியசாலைக்குத் தொடர்பு கொண்டு, அவர்களுக்குரிய இலக்கங்களைத் தெரிவித்து, முகவரி, தொலைபேசி இலக்கங்களை வழங்கி மருந்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய அஜித் தந்தநாராயன தெரிவித்துள்ளார்.


## அறிவித்தல்

### ஷன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (PQ-13)

### 48 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

கீழ்க்காணும் இந்த அறிவித்தலின் பிரகாரம், ஷன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (கம்பனி) இன், நாற்பத்தெட்டாவது (48ஆவது) வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பாக 2021 ஜூன் முதலாம் திகதியன்று முறைப்படி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, வெள்ளிக்கிழமை 25 ஜூன் மாதம் 2021 காலை 9.15 மணிக்கு இணையம் ஊடான நிகர்நிலைத் தளத்தில் நடைபெற உள்ளது.

கூட்டம் தொடர்பான நிகழ்ச்சிநிரல் மற்றும் கூட்டம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் பதிவுப்படிவத்தையும் கொழும்பு பங்குச் சந்தையின் இணையத்தளம் https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=SUN.N0000 மற்றும், கொம்பனியின் இணையத்தளத்திலும் (https://sunshineholdings.lk/). காணலாம்.

கூட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பங்குரிமையாளர்கள், தயவுசெய்து மேற்குறிப்பிட்ட இணையத்தளங்களின் ஊடாகக் கிடைக்கப்பெறும் பதிவுப் படிவத்தைப் பூர்த்திசெய்து, கூட்டம் ஆரம்பிக்கும் குறிப்பிட்ட நேரத்தில் இருந்து 48 மணித்தியாலங்களுக்கு முன்னர், corporateservices@corporateservices.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

ஷன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி
சபையின் தீர்மானத்தின் பிரகாரம்.
கோர்ப்பரேட் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிட்டட்
செயலாளர்/பதிவாளர்
2021 ஜூன் மாதம் 02 ஆம் திகதியன்று

## அறிவித்தல்

### வட்டவளை பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி (PQ-65)

### 28 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

கீழ்க்காணும் இந்த அறிவித்தலின் பிரகாரம், வட்டவளை பிளாண்டேஷன் பிஎல்சி (கம்பனி) இன், இருபத்தெட்டாவது (28 ஆவது) வருடாந்த பொதுக்கூட்டம் ("AGM") தொடர்பாக 2021 மே மாதம் 24ஆம் திகதியன்று முறைப்படி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, வெள்ளிக்கிழமை 25 ஜூன் மாதம் 2021 காலை 10.15 மணிக்கு இணையம் ஊடான நிகர்நிலைத் தளத்தில் நடைபெற உள்ளது.

கூட்டம் தொடர்பான நிகழ்ச்சிநிரல் மற்றும் கூட்டம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் பதிவுப்படிவத்தையும் கொழும்பு பங்குச் சந்தையின் இணையத்தளம் (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=WATA.N0000) மற்றும், கொம்பனியின் இணையத்தளத்திலும் (https://watawalaplantations.lk/). காணலாம்.

கூட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பங்குரிமையாளர்கள், தயவுசெய்து மேற்குறிப்பிட்ட இணையத்தளங்களின் ஊடாகக் கிடைக்கப்பெறும் பதிவுப் படிவத்தைப் பூர்த்திசெய்து, கூட்டம் ஆரம்பிக்கும் குறிப்பிட்ட நேரத்தில் இருந்து 48 மணித்தியாலங்களுக்கு முன்னர், corporateservices@corporateservices.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

வட்டவளை பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி
சபையின் தீர்மானத்தின் பிரகாரம்.
கோர்ப்பிரேட் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிட்டட்
செயலாளர்/பதிவாளர்
2021 ஜூன் மாதம் 02 ஆம் திகதியன்று

ஒட்டமாவடியில்

# மூன்று கிராமங்கள் முடக்கப்பட்டன

■ எம்.எம்.அஹமட் அனாம்



ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மிராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு, மாஞ்சோலை ஆகிய கிராமங்கள், நேற்று (09) முதல் மறுஅறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாக, ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று அவசரக் கூட்டம் இடம்பெற்ற போதே, மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த பிரிவில், கடந்த சனிக்கிழமை 133 நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனை முடிவுகள், நேற்று முன்தினம் மாலை கிடைக்கப்பெற்றதன் பிரகாரம் 29 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

மேற்படி மூன்று கிராமங்களிலும் அதிக கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் இரவு கொரோனா தொற்றால் மரணம் ஒன்றும் பதிவாகியது.

இதன் பிரகாரம் குறித்த பகுதிகள், தனிமைப்படுத்தல் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளன.

அத்தோடு, தனிமைப்படுத்தல் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகம் ஊடாக அத்தியாவசிய பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அப்பகுதி மக்கள் தனிமைப்படுத்தலை மீறாது, வீடுகளில் இருக்குமாறும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டார்.

## கடலில் மூழ்கி மாணவன் மரணம்

■ பாறுக் ஷிஹான்,நூருள் ஹுதா உமர்

அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள கடலில் நேற்று முன்தினம் (08) மாலை நண்பர்களுடன் நீராடச் சென்ற மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் உயர்தரம் தொழில்நுட்பப் பிரிவில் கல்வி பயிலும் நேசமணி அக்ஸயன் (வயது 17) எனும் மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலம், பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும்.

இதேவேளை, மாணவனின் உடல் மீட்கப்பட்ட கடல் பகுதி ஆழமான பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அங்கு 'ஆழமான பகுதி' என்ற அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தப்பட உள்ளதாகவும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ச.ராஜன் தெரிவித்தார்.



## தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமனம்

■ வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தில், நான்கு தேசிய பாடசாலைகளுக்கு உடன் அமலுக்கு வரும் வகையில் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நியமனக் கடிதங்கள், கல்வி அமைச்சில் வைத்து, கல்வியமைச்சின் செயலாளரால் நேற்று (08) வழங்கப்பட்டன. இதன்படி, அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த எம்.ஐ.மீராமொகைதீன், சம்மாந்துறை வலயத்திலுள்ள சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த பா.சந்திரேஸ்வரன், திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த எம்.ஐ.மாஹிர், சம்மாந்துறை வலயத்திலுள்ள இறக்காமம் அஸ்ரப் மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த டேவிட் அமிர்தலிங்கம், திருக்கோவில் வலயத்திலுள்ள அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ணா தேசிய பாடசாலைக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரூ.5,000 கொடுக்கவில்லையா?

## 'மேன்முறையீடு செய்யலாம்'

■ எம்.எஸ்.எம். ஹனீபா



கொரோனா தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள, வருமானம் குறைந்த குடும்பங்களில் 5,000 ரூபாய் கொடுப்பனவுப் பட்டியலில் உள்ளடக்கப்படாதவர்கள் மேன்முறையீடு செய்யலாமென, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருமான வி.ஜெகதீசன், நேற்று (09) தெரிவித்தார்.

கிராம சேவகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரைத் தொடர்புகொண்டு, 5,000 ரூபாய் கொடுப்பனவுப் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதா என வருமானம் குறைந்த குடும்பங்கள் உறுதிப்படுத்தியதன் பின்னர் அக்கொடுப்பனவுக்கான மேன்முறையீடு செய்ய முடியுமென அவர் தெரிவித்தார்.

மேன்முறையீடு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து, சம்மந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் ஒப்படைக்களாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால்

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

### இரு நாள்களில் 10 பேர் கைது

■ வா.கிருஸ்ணா

நாட்டில் பயணக் கட்டுப்பாடு அமலிலுள்ள நிலையில், மதுபானசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்தப் பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி, விற்பனை குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி நியூட்டன் அவுஸ்கோன் தெரிவித்தார்.

கடந்த இரு நாள்களில் இக்குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து, மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களம், தொடர்ச்சியான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்றும் நேற்று முன்தினமும் வெல்லாவெளி, கிரான், வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொடர்ச்சியான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது, வெல்லாவெளி பிரதேசத்தில் இருவரும் கிரான், வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் எண்மரும் கைதுசெய்யப்பட்டதாகவும் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



வடக்குக்கு தடுப்பூசி:

# 'விரைவில் அறிவுறுத்தல் வழங்கப்படும்'

■ நடராசா கிருஸ்ணகுமார்



வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும், கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் விரைவுபடுத்துவதற்கான அறிவுறுத்தல் விரைவில் வழங்கப்படுமென்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (07) நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போது, வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும், கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் விரைவுபடுத்த வேண்டுமென்று, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார், இதன்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கெனவே, 50 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக குறைந்தது ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் தடுப்பூசிகளாவது அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.


அதேபோன்று, வவுனியா மாவட்டத்துக்கு குறைந்தது ஒரு இலட்சம் தடுப்பூசிகளையும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு குறைந்தது தலா 50 ஆயிரம் தடுப்பூசிகளையாவது விரைவாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, அமைச்சரின் கருத்துகளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, கிடைக்கின்ற தடுப்பூசிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் பாதிப்புகளின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்ற நிலையில், ஏற்கெனவே அமைச்சரவையில் உறுதியளிக்கப்பட்டது போன்று யாழ்ப்பாணத்துக்கான இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும். மேலும், வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொள்வதாகத் தெரிவித்த ஜனாதிபதி, விரைவில் அதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில்

## விபத்தில் சிக்கிய உழவு இயந்திரம்

■ எம்.றொசாந்த்



சாவகச்சேரி, கச்சாய் பகுதியில், நேற்று முன்தினம் (08), இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் இருந்து, தப்பிச் செல்ல முற்பட்ட மணல் கொள்ளையர்களின் உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

கச்சாய் பகுதியில், கும்பலொன்று மணல் கொள்ளையில் ஈடுபடுவதாக இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், இராணுவத்தினர் அப்பகுதிக்கு விரைந்து கொள்ளையர்களை சுற்றி வளைத்து கைது செய்ய முயன்றனர்.

இதன்போது இராணுவத்தினரைக் கண்ட மணல் கொள்ளையர்கள், உழவு இயந்திரத்துடன் தப்பிச் செல்ல முற்பட்ட போது, உழவு இயந்திரத்தின் முன் சக்கரம் உடைந்து விபத்துக்குள்ளானது.

இதையடுத்து, ஒருவர் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டார். ஏனையவர்கள் அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சிக்கிக்கொண்டவரை கைது செய்த இராணுவத்தினர்,அவரை சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அத்துடன், விபத்துக்குள்ளான உழவு இயந்திரத்தையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில், சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பயணக் கட்டுப்பாட்டில்

## கொள்ளையடித்த இருவர் சிக்கினர்

■ எம்.றொசாந்த்

பயணக் கட்டுப்பாடு அமலில் உள்ள நிலையில், கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து, பொருட்களைத் திருடிச் சென்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில், குறித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் ஜன்னல் வழியாக நுழைந்த திருடர்கள். மடிக்கணினி, அலைபேசி, சைக்கிள்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கமைய, குருநகர் மற்றும் சாவகச்சேரி பகுதிகளைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த போது, அவர்கள் மேலும் ஒரு வீட்டில் திருடிய குற்றத்தையும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களால் திருடப்பட்ட இரண்டு மடிக்கணினிகள், இரண்டு அலைபேசிகள், இரண்டு சைக்கிள்கள், 50 ஆயிரம் ரூபாய் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.



உப்புமாவெளி மணல் குவியல்:

## பொலிஸார் வழக்குத் தாக்கல்

■ நடராசா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு, உப்புமாவெளி பிரதேசத்தில் உள்ள ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான காணியில் குவிக்கப்பட்டுள்ள மணல் குவியல்கள் தொடர்பாக, முல்லைத்தீவு பொலிஸாரால், நேற்று (09), முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை ஆராய்ந்த நீதவான், மணல் அகழ்வுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வவுனியாவில்

## 74 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை

■ க. அகரன்





ஆடைத் தொழிற்சாலைக்கு செல்லும் பஸ்கள்களில் பயணித்தோர், வியாபார நிலையங்களில் தங்கியிருந்தோர் என 74 பேருக்கு, வவுனியா வடக்கு - புளியங்குளம் பகுதியில் வைத்து, நேற்று (09) பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

ஒமேகா, ஹைராமனிக் ஆடைத் தொழிற்சாலைக்கு பஸ்ஸில் பயணித்த ஊழியர்கள், புளியங்குளம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் தங்கி இருந்தவர்களுக்கே இவ்வாறு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, ஆடைத் தொழிற்சாலைக்கு பஸ்ஸில் செல்பவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பயணிக்கிறார்களா, வர்த்தக நிலையங்களில் சுகாதார நடைமுறைகளை பேணுகின்றார்களா என்பது குறித்தும் அவதானிக்கப்பட்டது.

## தடுப்பூசி ஏற்றல்...

### நுவரெலியா







■ நுவரெலியா நிருபர்கள்

கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மலையகத்தில் பல மாவட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நுவரெலியாக, காமினி தேசிய பாடசாலையில் ஆரம்பமான தடுப்பூசி ஏற்றும் பணியை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், நேற்று (09) நேரில் சென்று கண்காணித்தார்.

### இரத்தினபுரி

■ சிவாணி ஸ்ரீ

இரத்தினபுரி மாவட்டத்தில் பணியாற்றும் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் (8) தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இரத்தினபுரி மாநகர சபையின் மேயர் டிரோன் அத்தநாயக்க, சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர்கள் நேரில் சென்று கண்காணித்தனர்.





### பதுளை







■ எஸ். செல்வராஜ்

பதுளை மாவட்டத்தின் ஹப்புத்தளை பிரதேச செயலகம், பண்டாரவளை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிட்டவல சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் முதற்கட்ட கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று (09) முன்னெடுக்கப்பட்டன.

### யட்டியாந்தோட்டை







■ அருள்ஷான்

யட்டியந்தோட்டை பிரதேசத்தில் என்.எம்.பெரேரோ தேசிய பாடசாலை, கரவனல்ல-வெந்தல விஹாரை ஆகிய இடங்களில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பொருள்களின் விலையுயர்வு

# ‘கழுத்தை நெரிக்கிறது’

## ராதா எம்.பி தெரிவிப்பு

■ நிலமேகம் பிரசாந்த்

தற்போது நாட்டில் அதிகரித்துக் காணப்படும் பொருள்களின் விலையுயர்வு மலையக மக்களின் கழுத்தை இறுக்கிப் பிடிப்பதாக, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வே.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று, பயணக்கட்டுப்பாட்டுக்கு மத்தியில் அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் தொடர்பில் வினவும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அரிசி, தேங்காய், தேங்காய் எண்ணெய் உட்பட பல அத்தியாவசிய பொருட்களின் விலையுயர்வு, மலையக மக்களை மேலும் பொருளாதாரத்தில் பின்நோக்கியே செல்ல வைக்கின்றது.

ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைத்தாலும் மிகுதியை சேமிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. காரணம் அந்த அளவுக்கு பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. அரசாங்கம் பெற்ற கடன்களை மக்கள் மேல் திணிக்கவே அரசாங்கம் இப்படியான நிலையை நாட்டில் உருவாக்கியுள்ளது. இதற்கு அரசாங்கத்தின் சரியான திட்டமிடலும், முகாமைத்துவம் இல்லாமையே காரணம்.

எனவே, இவ்விலை ஏற்றத்தால் பெரிதும் பாதிப்படைவது மலையக மக்களே எனத் தெரிவித்த அவர், பொருள்களின் விலையுயர்வை உடனடியாக குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# நகர கழிவுகளிலிருந்து சேதன உரத்தை தயாரிக்க யோசனை



■ சுமணசிறி குணதிலக

பதுளை நகரில் அகற்றப்படும் கழிவுகளைப் பயன்படுத்தி, சேதன உரத்தைத் தயாரிப்பதற்கான யோசனையொன்று, ஊவா மாகாண சபையில் நேற்று (9) முன்வைக்கப்பட்டது.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முஸம்மில் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நிலத்தடி கழிவு முகாமைத்துவம் மூலம், கழிவுகள் கொட்டப்படும் நிலத்தை பூங்காவாக அபிவிருத்தி செய்தல், கொம்போஸ்ட் உரத்தை தயாரிப்பதன் ஊடாக சேதன உரத்துக்கான தேவையைப் பூர்த்தி செய்வது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.



## கட்டில்கள் அன்பளிப்பு...

■ சுமணசிறி குணதிலக

பிபிலை, இங்கினியாகல, புத்தல ஆகிய வைத்தியசாலைகளின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு, ஆரம்ப சிகிச்சைப் பிரிவு என்பவற்றுக்கான கட்டில்கள் உள்ளிட்ட உபகரணங்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பொறியியல் முன்னணியால் அன்பளிப்பு செய்யப்பட்டன.

# காட்டுப் பன்றியென நினைத்து சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை- இரத்தோட்டை பொல்வத்த பிரதேசத்திலுள்ள மிளகுத் தோட்டமொன்றுக்குள் சட்டவிரோதமாக நுழைந்த இளைஞர் ஒருவர், தோட்ட உரிமையாளரால் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமானது நேற்று முன்தினம் (8) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில், பொல்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதான கயான் ஜயவர்தன என்ற இளைஞரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

எனினும் காட்டுப்பன்றியே தனது மிளகுத் தோட்டத்துக்குள் நுழைந்து விட்டதாக நினைத்தே, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தோட்ட உரிமையாளர் தெரிவித்துள்ளதுடன், துப்பாக்கியுடன் இரத்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஆஜரானதையடுத்து, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



ஹெறோ தோட்டத்தில்

# டெங்கு பரவும் அபாயம்

■ நிலமேகம் பிரசாந்த்

கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட ஹெறோ தோட்டத்தில் டெங்கு பரவும் அபாயம் காணப்படுவதாக தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மழைக்காலங்களில் வடிகான்கள் ஊடாக, கழிவுகள் உட்பட பிளாஸ்ரிக் பொருட்கள் அடித்து வரப்பட்டு தேங்கி நிற்பதால், இதனூடாக டெங்கு பரவும் அபாயம் காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தோட்ட வெளிக்கள உத்தியோகத்தித்தரிடம் தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம் சுமத்தியுள்ளனர்.

மண்சரிவால்

# மிடில்டன் கோவிலுக்கு சேதம்

■ சுஜிதா, துவாரக்ஸன்

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழையால் ஏற்பட்ட மண்சரிவால், நேற்றைய தினம் (9) தலவாக்கலை - மிடில்டன் தோட்ட கோவிவிலின் சுவர் சேதமடைந்துள்ளது.

குறித்த கோவிலின் நிர்மாணப் பணிகள் தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையிலேயே மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மண்சரிவு ஏற்பட்ட பிரதேசத்தின் மேற்பகுதியில் குடியிருப்புகள் அமைந்துள்ளதுடன்,



தொடர்ச்சியாக மழை பெய்யும் பட்சத்தில் குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படும் அபாய நிலை இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

கம்பளை நகரில்

# 9 யாசகர்களுக்குத் தொற்று

■ நவி

கம்பளை நகரில் ஒன்பது யாசகர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பளை நகரிலுள்ள பஸ் தரிப்பிடத்திலேயே அதிகளவான யாசகர்கள் தங்கியுள்ள நிலையில், இவர்களுள் ஒருவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டதை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து பஸ் தரிப்பிடத்தில் தங்கியிருந்த 13 யாசகர்களுக்கு செய்யப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போது, 8 யாசகர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



# தலையில் மண்ணை வாரியிறைத்துக் கொள்ளக் கூடாது

சிலர், தங்களது ஆணவத்தால் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்வர். அதைத்தான், 'யானை தன் தலையில், தானே மண்ணை அள்ளிப் போட்டுகொண்ட மாதிரி' என்று கூறுவர். யானையின் தலையில் ஊறும் மதநீரின் ஊறலைத் தடுக்கவே, அவ்வாறு செய்துகொள்கிறது. ஆனால், பகுத்து அறியத் தெரியாத மனிதர்கள் பலர், தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்.

பயணக்கட்டுப்பாட்டுக்குள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நாடு, அதிலிருந்து விடுவிக்கப்பட்டு, வழமையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படினும், சுகாதார வழிகாட்டல்களை அச்சொட்டாகப் பின்பற்றவேண்டும். இல்லையேல், 'பழைய குருடி, கதைவைத் திறவடி' என்பதற்கிணங்க, ஆரம்பத்துக்கே இழுத்துச்சென்றுவிடும்.

காலங்கடந்து எடுக்கப்பட்ட தீர்மானத்தாலும், மக்கள் கட்டுக்கடங்காது சென்றமையாலும் பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படும் நாள் தொடர்பில் ஏதுமறியாது, பலரும் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். கையிலிருந்த பணம் செலவழிந்து, அடுத்தவேளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வதெனப் பலரும் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியேல், "கட்டுப்பாட்டைத் தளர்த்துவது, தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ளாதவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்" எனத் தெரிவித்துள்ளார். அக்கூற்றை ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

உருமாறிய கொரோனா வைரஸ் தொற்று, வேகமாகப் பரவுவதுடன் உயிரிழப்புகளையும் அதிகளவில் ஏற்படுத்தி வருகின்றது. இது இலங்கைக்கு மட்டுமன்றி, உலக நாடுகளுக்கே பெரும் சவாலாக மாறிவருகின்றது.

பக்கநோய்கள் எவையும் இல்லாவிடின், கொரோனா தடுப்பூசியை செலுத்திக்கொள்வதில் எவ்விதமான தயக்கத்தையும் காட்டவேண்டியதில்லை. இதைச் சமூகத் தலைவர்கள் வலியுறுத்த வேண்டும். தடுப்பூசி செலுத்திக்கொள்வதை ஊக்கப்படுத்த வேண்டும்.

கொரோனா தடுப்பூசியை செலுத்திக்கொண்டதன் பின்னர், பக்க விளைவுகள், ஒவ்வாமை ஏற்படுமென்ற மனப்பிராந்தியைத் தவிர்த்திட வேண்டும். ஏனெனில், தடுப்பூசியைச் செலுத்திக்கொண்ட இலட்சக்கணக்கானோர், அச்சமின்றி நடமாட முடியுமென்ற மனத் திடகாத்திரத்தைக் கொண்டுள்ளனர். ஆனால், 'தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாதவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருந்தால்'? என்ற சந்தேம் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கத்தான் செய்கின்றது.

ஏதாவதொன்று இலவசமாக வழங்கப்படுமாயின், அக்கம் பக்கத்தவர்களுக்கும் தண்டோரா போட்டுவிட்டு செல்வதே வழக்கம், இல்லையேல், முதலில் வாங்கிவந்துவிட்டு, பின்னர் அறிவிப்பர், ஆனால், தடுப்பூசி விவகாரத்தில் தண்டோரா போடப்படுவதில்லை; அக்கம்பக்கத்தினருக்கு தெரியாமல் சென்று போட்டுக்கொண்டு வந்துவிடுகின்றனர்.

முதலாவது டோஸை ஏற்றிக்கொண்டவர்கள், இரண்டாவது டோஸுக்கான அறிவிப்பு வெளியாகும் வரையிலும் காத்திருப்பதே மனித அழகு. அதனூடாக, சுற்றியிருப்பவர்களுக்கும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதற்கு வாய்ப்புகள் கிட்டும். 'தனக்கு மட்டும்' என்ற ஆணவத்தின் ஊடாக, தலையில் மண்ணை வாரியிறைத்துக் கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

குனிந்தவன் கோழை; அழுபவன் ரோகி; சிரிப்பவன் என்றும் உல்லாசி; எதற்கும் பயந்தவன் சந்தோஷமாக இருக்க முடியாது. எப்பொழுதும் கவலைப்படுபவன், உடலில் பலமிழந்து, நோய்களை வரவழைக்கிறான். ஆனால், அகம் நிறைந்தவன், என்றும் களிப்பு நிலையில், முழுமையாகவும் நிறைவாகவும் பேறுகளுடனும் வாழ்ந்து வருகின்றான்.

துன்பங்கள் எதிர்பாராமல் தானாகப் பற்றுவதுண்டு. ஆனால், தேவையற்ற விதத்தில், அநேக சுமைகளை ஏற்றுவதால், அந்தத் துன்பங்கள் நிரந்தரமாகத் தங்கிவிடுகின்றன. வாழ்க்கையின் அர்த்தம், 'பிறப்பது வாழ்வதற்கானது' எனப் புரிந்துகொள்ள வேண்டும்.

மகிழ்ச்சியை மட்டும் இணைக்கும் மனோ நிலையை உருவாக்க வேண்டும். எம்மைச் சுற்றியுள்ளவர்களையும் சந்தோஷப்படுத்த முனையவேண்டும்.

கஷ்டப்படுபவர்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கு ஏது வழி எனத் தெரிந்து உதவினால், அதுவே மிகப்பெரும் தர்மம். எங்களுக்கானது மட்டுமல்ல சந்தோஷம்; பிறருக்கானதும் கூட!

உலகை நோக்காது, வாழ்வது எப்படி? மிகப்பெரிய பரந்த வீடு, எமது வையகம்.

எனவே, மற்றவர்களையும் எமது சுற்றத்தவர்கள் என எண்ணுபவன் ஞானி ஆகின்றான். எல்லோரும் சுதந்திரமான மனோ நிலையில் வாழ வேண்டும். புதியவர்கள் எவராயினும் பேதத்துடன் நோக்கலாகாது. பிறந்தது வாழ்வதற்கே!

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ராஜபக்‌ஷர்கள் மீதான அதிருப்தியும் எதிர்க்கட்சிகளும்



புருஜோத்தமன் தங்கமயில்

ராஜபக்‌ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்து, 18 மாதங்களுக்குள்ளேயே தென் இலங்கை மக்களிடம் பெரும் அதிருப்திகளைச் சந்தித்து நிற்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் வாக்குகளையும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அண்மித்த வெற்றியையும் ராஜபக்‌ஷர்கள் பெற்றிருந்தார்கள். அடுத்த பத்து ஆண்டுகளில், அசைத்துப் பார்க்க முடியாத ஆட்சிக் கட்டமைப்பொன்றை, ராஜபக்‌ஷர்கள் நிலைப்படுத்துவார்கள் என்று நம்பப்பட்டது.

ஆனால், சில மாதங்களுக்குள்ளேயே ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான மனநிலை தென் இலங்கையில் எழுந்திருக்கின்றது. கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்து நெருக்கடிகள், மக்களைப் பாடாய்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், சாதாரண மக்களை மேலும் மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் முகமான அறிவித்தல்களை, அரசாங்கம் விடுத்திருக்கின்றது.

ஆட்சிக்கு வந்த சில காலத்துக்குள்ளேயே உழுத்து, பயறு, மஞ்சள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மீதான இறக்குமதிக்கான தடை, எந்தவித முன்னறிவிப்பும் இன்றி விதிக்கப்பட்டது.

அண்மைக்காலத்தில் அரிசி, சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் அதிகரித்திருக்கின்றன. அரிசியை அடிப்படையாகக் கொண்டதே, இலங்கையர்களின் உணவு முறை. அப்படிப்பட்ட நிலையில், அரிசியின் விலை அதிகரிப்பு என்பது, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்திருக்கின்றது.

அதிலும், அரிசிக்கான தட்டுப்பாடு, இடைத்தரகர்கள் உள்ளிட்ட முதலைகளால் செயற்கையாக ஏற்படுத்தப்படுகின்றது. கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக் காலத்தில், அரிசிக்கான தட்டுப்பாடு உருவாகி இருக்கின்றது. அதை, சீர்செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை.

இன்னொரு கட்டத்தில், விவசாய உர இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை, எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, அரசாங்கம் விதித்திருக்கின்றது. இயற்கை உர விவசாய முறைமையை நோக்கி, நாட்டை முன்நகர்த்த வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்‌ஷ கூறியிருக்கின்றார். அதற்காக எந்தவிதமான சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

நாட்டின் விவசாயத்தை, இயற்கை உரத்தைப் பயன்படுத்தும் கட்டங்களை நோக்கித் திருப்புவது வரவேற்கக் கூடியதுதான். ஆனால், அதனை ஒரு சில நாள்களில், ஏன் சில வருடங்களில் கூட ஏற்படுத்திவிட முடியாது. அதற்கு நீண்ட காலத் திட்டமிடலுடன் கூடிய முன்னாயத்தமும் வேண்டும். மாறாக, ஒரே நாளில் தீர்மானத்தை எடுத்து அறிவித்துவிடுவதால், விவசாய முறைமையை மாற்ற முடியாது.

நாட்டிலுள்ள விவசாயிகள், பெரும்போக விவசாயத்துக்காகத் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலையில், உரத்துக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக் காலத்திலும், உரத்துக்காகக் கடைகளுக்கு முன்னால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் காத்திருக்கிறார்கள்.

சரியான தருணத்தில் உரம் கிடைக்காமையால், வாடிக் கருகிய பயிர்கள் முன்னால் நின்று அழும் விவசாயிகளைக் காண வேண்டியிருக்கின்றது. ராஜபக்‌ஷர்களின் தேர்தல் கால வாக்குறுதிகளில் விவசாயிகளைக் காத்தல், குறிப்பாக, உரமானியங்களின் ஊடாக விவசாயத்துக்குப் புத்துயிர் அளிப்பது என்பன, முக்கியமான வாக்குறுதிகளாக வழங்கப்பட்டன. ஆனால், சதாரண விவசாயிகளின் எண்ணங்களைப் புரிந்து கொள்ளாமல், மேல் மட்ட சிந்தனைகளின் தீர்மானங்களில் அடிப்படையில் நெருக்கடி ஏற்படுத்தப்படுகின்றது.

உணவுப் பொருட்களுக்கான கேள்வி அதிகமிருக்கின்ற நிலையில், நாட்டின் விவசாய முறைமை, இயற்கை வழிமுறையில் மாத்திரம் தங்கியிருக்க முடியாது. அதற்கான தயார்படுத்தல் ஏதும், கடந்த காலத்தில் முன்னெடுக்கப்படவில்லை.

அப்படியான நிலையில், மக்களின் மீது நெருக்கடிகளை ஏற்படுத்தாத வகையில் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும். ஆனால், அதனை ராஜபக்‌ஷர்களும் அவர்களின் ஆலோசகர்களும் செய்கிறார்கள் இல்லை.

கடந்த சில மாதங்களுக்குள்ளேயே, விவசாய அமைச்சின் செயலாளர்கள் இருவர் இராஜினாமாச் செய்திருக்கிறார்கள். அது ஏன் என்று ஆராய்ந்தாலே, அரசாங்கத்தின் முறையற்ற சிந்தனைகள் தெளிவாகத் தெரியும்.

கடந்த வாரம், 'ஷூம்' செயலி மூலமான கலந்துரையாடலொன்றில், ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சுரேன் ராகவன், "ராஜபக்‌ஷ அரசாங்கம், என்றைக்கும் இல்லாதளவுக்கு, தென் இலங்கை மக்களிடம் நம்பிக்கை இழந்திருக்கிறது" என்று கூறினார்.

ஆளுங்கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கிற ஒருவரால், பொது உரையாடல் தளத்தில், தனக்கு இருக்கின்ற நெருக்கடிகளை எல்லாம் தாண்டி நின்று, தென் இலங்கை மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்க முடிந்திருப்பது என்பது, கவனத்தில் கொள்ளக்கூடியது.

நாட்டில் எதிர்க்கட்சி(கள்) எப்போதும் போல, இப்போதும் அமைதியாகவே இருக்கின்றன. நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து எதிர்வினையாற்றுவதற்கு, எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ, நீண்ட காலத்தை எடுத்துக் கொள்கின்றார்.

சிலவேளை, ஒரு பிரச்சினை நடத்து முடிந்து, சில வாரத்துக்குப் பின்னர்தான் அவர், அந்தப் பிரச்சினை குறித்து எதிர்வினையாற்றுகிறார். அரசாங்கத்தின் தவறுகளை, அந்த நொடியிலேயே சுட்டிக்காட்டி, மக்களின் பிரச்சினைக்காகத் தொடர்ச்சியாகச் செயற்படும் எண்ணம் என்பது, எதிர்க்கட்சிகளிடம் காணக்கிடைக்கவில்லை.

ராஜபக்‌ஷர்களின் ஆட்சியின் காலம் முடிவதற்கு, இன்னும் மூன்றரை ஆண்டுகள் இருக்கின்றன. அப்படியான நிலையில், பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை' எனும் போக்கில், எதிர்க்கட்சியினர் செயற்படுகின்றனர். இன்னொரு தேர்தலொன்று அறிவிக்கப்பட்டால் அன்றி, எதிர்க்கட்சிகளை செயற்பாட்டுத் தளத்துக்குக் கொண்டு வருவது என்பது முடியாத காரியம்.

நாடும், நாட்டு மக்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்காகச் சிந்திப்பதற்கான தரப்புகள், நீர்த்துப் போயுள்ள நிலையில், மக்கள் என்ன செய்வதென்று தெரியாது, குழம்பிப் போயிருக்கிறார்கள்.

தேர்தல் அரசியலால் ஆட்கொள்ளப்பட்டுவிட்ட மக்களுக்கும், பிரச்சினைகளைத் தேர்தல்கள் மாத்திரமே தீர்க்கும் என்ற எண்ணம் புகுத்தப்பட்டு இருக்கின்றது. அதனால், அவர்களும் தேர்தல்கள் வரும் வரையில், எதிர்கொள்ளும் பிரச்சினைகளுடன் புளுங்கிக் கொண்டிருப்பது வழக்கமாகிவிட்டது.

ஆனால், வழக்கத்துக்கு மாறாக, ராஜபக்‌ஷர்கள் ஆட்சியமைத்து சில மாதங்களுக்கு உள்ளேயே, ஆட்சிப் பங்காளிகளுக்கு இடையில் பெரிய குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அதாவது, ராஜபக்‌ஷர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்காக உழைத்த தரப்புகள், குறிப்பாக பௌத்த அதிகார பீடங்கள், ஊடகங்கள், தென் இலங்கை அடிப்படைவாத சக்திகள், இன்றைக்கு தங்களுக்குள் முரண்படத் தொடங்கிவிட்டன. அமைச்சர்களுக்கு இடையிலான மோதல்கள் ஊடகங்களில் 'பல்லிளிக்கிறது'. ராஜபக்‌ஷ சகோதரர்களுக்கு இடையிலான அதிகார மோதல், ஆளுங்கட்சிக்கு உள்ளேயே குழுக்களை உருவாக்கி இருக்கின்றது.

20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம், ஆட்சி ரீதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ செலுத்தி வந்த அதிகாரங்களும் கட்சி ரீதியில் அவர் செலுத்தி வந்த அதிகாரங்களும், சகோதரர்களான கோட்டா, பஷில் ஆகியோரால் பறிக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு, மஹிந்த ராஜபக்‌ஷ தீர்மானங்களை எடுக்கும் ஒருவர் அல்ல.

ஆட்சி அதிகாரம் கோட்டாவிடமும் கட்சி சார் அதிகாரமும் அடுத்த கட்டத் தீர்மானங்களும் பஷிலிடமும் சென்று சேர்ந்துவிட்டன. வழக்கமாக இலங்கையின் அரசியல் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பு, ஒருவரை மையப்படுத்தியே இருந்திருக்கின்றது. அவ்வாறுதான், ஆளுங்கட்சியும் அதன் பங்காளிகளும் ஒரே புள்ளியில் சுற்றியிருக்கின்றன.

கட்சி ஒருவரிடமும், ஆட்சி இன்னொருவரிடமும் இருந்த தருணங்களில் அவை, குழப்பங்களில் முடிந்திருக்கின்றன. ஏனெனில், அவ்வாறானதோர் அரசியல் ஒழுங்கு, இங்கு வளர்த்தெடுக்கப்படவில்லை.

அதாவது, கேள்விகளுக்கு அப்பாலான மன்னர் ஆட்சிக் கட்டமைப்பு ஒன்றைப் பேணுவது சார்ந்தே, ஆட்சியாளர்கள் கவனமாக இருந்திருக்கிறார்கள். அதன் விளைவுதான், ஆட்சியும் கட்சியும் இரு வேறு நபர்களிடம் இருக்கும் போது வருவது. இப்போதும், அதுதான் நிலை.

ராஜபக்‌ஷர்கள் மீதான அதிருப்தி, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. அந்த அதிருப்திக்களுக்கான காரணங்களை, ராஜபக்‌ஷர்களே ஏற்படுத்துகிறார்கள். ஆனால், எதிர்க்கட்சி உள்ளிட்ட ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக உழைக்க வேண்டிய தரப்புகள் எல்லாமும், அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கின்றன.

அவ்வாறான நிலையில், ராஜபக்‌ஷர்கள் மீதான அதிருப்தி, ஒரு கட்டத்தில் மக்களுக்கு பழகிவிடும். அது, இன்னும் இன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

## கடிதங்கள்

### பயணத்தடையால் பஞ்சத்தில் கூலித்தொழிலாளர்கள்

#### மட்டி பொறுக்கி பசிபோக்கும் அவலம்

பயணத்தடை காரணமாக, மன்னார் மாவட்டத்தில் அன்றாட கூலித் தொழிலில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள், நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அன்றாட உணவுத் தேவையைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், பல குடும்பங்கள் கடற்கரையோரத்தில் உள்ள நீரில், மட்டி பொறுக்கி, தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நீண்ட பயணத் தடை, கீழ் நடுத்தர குடும்பங்களையே பெரிதும் பாதித்துள்ள நிலையில், உரிய தொழில் வாய்ப்புகள் இல்லாமல் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால், அன்றாட கூலித் தொழிலை மட்டும் வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்கள், செய்வதறியாது தவித்து வருகின்றனர்.

மட்டி பொறுக்குதலை உணவுக்காகவும் இன்னும் சிலர் மட்டியில் இருந்து சேகரித்த சதைகளை விற்பனை செய்தும் இந்தப் பஞ்ச நிலைமையை எதிர்கொள்கின்றார்கள்.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவு, சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டுள்ள நிலையில், சமுர்த்தி பெறாத வறுமைக் கோட்டுக்கு கீழ்ப்பட்ட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குறித்தும், அரசாங்க அதிகாரிகள் சிந்தித்து, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–எஸ். றொசேரியன் லெம்பேட்





## அரசடித்தீவு, முதலைக்குடா, வவுணதீவு, கொல்லநுலை: விசேட தேவையுடைய 62 குடும்பங்களுக்கு உதவி

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட, அரசடித்தீவு, முதலைக்குடா, வவுணதீவு, கொல்லநுலை ஆகிய பகுதிகளில் உள்ள, விசேட தேவையுடைய பிள்ளைகளின் 62 குடும்பங்களுக்கு, ரூபாய் 2,000 பெறுமதியான உலர் உணவு பொதிகள் நேற்று முன்தினம் (08) வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பைச் சேர்ந்த, கனடாவில் வசிக்கும் ஜெபராஜா பிரின்ராஜ்குமாரின் நிதியுதவியின் கீழ், மட்டக்களப்பு மேற்கு விசேட பிரிவினர் இவ்வுலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

வ. திவாகரன்



## அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன சகாத் நிதியம் 1,500 குடும்பங்களுக்கு உதவி



அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன சகாத் நிதியத்தின் மூலம், மிகவும் தேவையுடைய 1,500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நூருள் ஹுதா உமர்




## சீதனவெளி, சந்தோசபுரம் கிராமங்களின் 115 குடும்பங்களுக்கு உலர் உணவு

மூதூர் கிழக்கு, சீதனவெளி, சந்தோசபுரம் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 115 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ஜெ. ஜெனார்த்தனால் நேற்று முன்தினம் (08) வழங்கி வைக்கப்பட்டது. நிதி உதவியை, இலண்டனில் வசிக்கும் சகோதரி கலாவும், ஒழுங்கமைப்பை கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியனும் திருகோணமலை ஐயப்பன் கோவில் பிரதம அர்ச்சகரும் வழங்கியருந்தனர்.

அ. அச்சுதன்






## பளை, கண்டாவளை, கரைச்சி 300 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்



தீவக அரிமாக் கழகமும் ( lions club of kayts Theevagam) கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகமும் இணைந்து, கொழும்பு வாழ் வர்த்தகர்களின் அனுசரனையுடன், கொவிட்- 19 ஆல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 1,935 ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளை, பளை, கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்த 300 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

நடராசா கிருஸ்ணகுமார்

## மல்வானை முஸ்லிம் பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மல்வானை முஸ்லிம் பிரதேசங்களுக்கு, பியகம பிரதேச சபை தலைவர் ஆனந்த கனேபொல, நேரடியாக விஜயம் செய்து, மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்ததோடு, உலர் உணவுப் பொதிகளையும் வழங்கிவைத்தார். இதன்போது, மல்வானை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் உஸ்மான் ஹாஜியார் உட்பட பிரதேச முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.






புதுடெல்லி

### வேளாண் சட்டங்களை மீளப்பெறமுடியாது;

# ‘விவசாயிகளுடன் பேசத் தயார்’



புதிய வேளாண் சட்டங்களை மீளப்பெறுவதைத் தவிர வேறு பிரச்சினைகள் குறித்து விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசாங்கம் தயாராக இருப்பதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தெரிவித்துள்ளார்.

புதிய வேளாண் சட்டங்களில் விவசாயிகள் கூறும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும், விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையில் எந்த மாற்றமும் இருக்காது, விவசாய இடங்கள் அகற்றப்பட மாட்டாது என்பன உள்ளிட்ட உறுதிமொழிகளை இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கம் முன்மொழிந்தது.

இந்த நிலையில் மத்திய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசாங்கம் தொடர்ந்து பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விவசாய அமைப்புகள் பேச விரும்பினால் அவர்களுடன் பேச மத்திய அரசாங்கம் தயாராக உள்ளது. புதிய வேளாண் சட்டங்கள் விவசாயிகளை பாதிக்காது. அதுதொடர்பாக விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளின் கோரிக்கைகள் கேட்கப்பட்டு அதில் மாற்றங்களும் செய்யப்பட்டு விட்டன. இப்போது கூட விவசாயிகளுடன் திறந்த மனதுடன் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசாங்கம் தயாராக உள்ளது என்றார்.

தஞ்சாவூர்

## தாதியின் தவறால், குழந்தையின் விரல் துண்டானது



தஞ்சையை அடுத்த காட்டூர் கிராமத்தை சேர்ந்த பிரியதர்ஷினி, பிரசவத்துக்காக தஞ்சை ராசா மிராசுதார் அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு பிரியதர்ஷினிக்கு பெண் குழந்தையொன்று பிறந்தது.

இக் குழந்தை,குறைப் பிரசவத்தில் பிறந்ததால், அந்தக் குழந்தைக்கு வயிற்றில் கோளாறு இருப்பதாகவும், இதனால், தாய்ப்பால் கொடுக்க வேண்டாமெனவும் டொக்டர்கள் தெரிவித்தனர். குழந்தை தீவிர சிகிச்சை பிரிவில் வைக்கப்பட்டு, குழந்தையின் இடது கையில் மருந்து ஏற்றும் சாதனம் வழியாக உணவு வழங்கப்பட்டு வந்தது. இதேவேளை,குழந்தையின் கை அசையாமல் இருக்கவும் டொக்டர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

குழந்தைக்கு தொடர்ச்சியான சிகிச்சை காரணமாக, உடல்நலம் தேறி, நல்ல நிலையில் குழந்தை இருந்துள்ளது. இதனால், தாயையும், குழந்தையையும் வீட்டிற்கு அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டது.

இப்போது, குழந்தையின் கையில் இருந்த மருந்து ஏற்றும் சாதனத்தை அகற்ற தாதியொருவர் முயற்சி செய்தார். அவரால் அதை அகற்ற முடியாததால், கத்தரிக்கோலால் நறுக்கியபோது, குழந்தையின் கை பெரு விரல் துண்டாகிவிட்டது.

இதைப் பார்த்து அந்தஅந்த தாதி அதிர்ச்சி அடைந்தார். மேலும் குழந்தையின் கையில் இருந்து இரத்தம் பீறிட்டதைக் கண்ட தாய் பிரியதர்ஷினி கதறி அழுதார். கவனக்குறைவால் தவறு நடந்து விட்டதை அறிந்த தாதி உடனடியாக டொக்டர்களுக்கு தகவல் கொடுத்தார். குழந்தையின் துண்டான விரலை கையுடன் இணைத்து தையல் போட்டார்.

தற்போது குழந்தை நல்ல நிலையில் இருந்தாலும் அந்த விரலின் நிலை பற்றி எந்தவித தகவலும் தெரியவில்லை. இந்த சம்பவத்திற்கு பிறகு மனஉளைச்சலுக்கு ஆளான அந்த தாதி தொடர்ந்தும் பணிக்கு வரவில்லை.

உடுப்பி

## மனைவி, மகன் உட்பட மூவருக்கு ஆயுள் தண்டனை

கர்நாடகத்தை அதிர்ச்சி அடைய வைத்த, ஐந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த, உடுப்பியை சேர்ந்த பாஸ்கர் ஷெட்டி கொடூர கொலை வழக்கில், மனைவி, மகன் உட்பட மூவருக்கு ஆயுள் தண்டனை விதித்து, உடுப்பி மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு அளித்துள்ளது.

உடுப்பியை சேர்ந்த தொழிலதிபர் பாஸ்கர் ஷெட்டி, 2016ஆம் ஆண்டு, ஜூலை 28ஆம் திகதி , வீட்டில் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். இதையறியாத பாஸ்கர் ஷெட்டியின் தாய், மணிப்பால் பொலிஸ் நிலையத்தில், ஜூலை, 31ஆம்திகதி புகார் செய்தார். தீவிர விசாரணையில் இறங்கிய பொலிஸார், எட்டு நாட்களுக்கு பின் மனைவி ராஜேஸ்வரி ஷெட்டி, மகன் நவ்நீத் ஷெட்டி ஆகியோரை விசாரித்தது. அப்போது, கொலை செய்ததை அவர்கள் ஒப்புகொண்டனர்.

2,000 பக்கம் கொண்ட குற்றப்பத்திரிகை, உடுப்பி மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.நீதிமன்ற விசாரணையில், மனைவி ராஜேஸ்வரி ஷெட்டி, 53, மகன் நவ்நீத் ஷெட்டி, 30, ஜோதிடர் நிரஞ்சன்பட், 35, ஆகிய மூவரும் கொலை செய்த குற்றம் நிரூபிக்கப்பட்டது. இந்நிலையில், மூவருக்கும் ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி சுப்பிரமணியா நேற்று தீர்ப்பு அளித்தார்.கணவரையே கொன்று எரித்த மனைவிக்கும், மகனுக்கும் ஐந்து ஆண்டுகளுக்கு பின் ஆயுள் தண்டனை கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

காந்தி சவுக்

### தடுப்பூசிக்குப் பயந்து

## ஊரை விட்டு ஓடும் கிராமத்தினர்




கொரோனாப் பரவலைத் தடுக்க இந்தியா முழுவதும் கொரோனா தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இந்த நிலையில் கொரோனா தடுப்பூசி போட்டால் ஆபத்து என்ற வதந்தியும் மக்கள் மத்தியில் பரவி வருகிறது. இவ்வாறு வதந்திகளை நம்பிய சில கிராம மக்கள் ஊரை விட்டு ஓடிய நிகழ்வொன்றும் இடம்பெற்றுள்ளது. தடுப்பூசி குறித்து மக்களிடம் மத்திய-மாநில அரசாங்கங்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றன. ஆனாலும் மக்களிடம் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படவில்லை.

யாதகிரி அருகே உள்ள காந்தி சவுக், சக்கரகட்டி, கொல்லவாடே ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடுவதற்காக சுகாதாரத்துறை அதிகாரிகள் சென்றனர். அப்போது கொல்லவாடே கிராம மக்கள் அதிகாரிகளை பார்த்ததும், கொரோனா தடுப்பூசி போட பயந்து கிராமத்தை விட்டே வெளியேறினர். அதிகாரிகள் அவர்களை தடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். ஆனாலும் தடுப்பூசி போட்டுக்கொள்ள மறுத்த அவர்கள், கொரோனா தடுப்பூசி போடுவதாக இருந்தால் ஊரை விட்டே செல்கிறோம் என்றனர்.

பெங்களூரு

## கூடாரம் அமைத்து ‘Work from home’

ஒசநகர் தாலுகா வாரம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த சிந்து பெங்களூருவில் வேலை பார்த்து வருகிறார்.

தற்போது கொரோனா ஊரடங்கால் இவர் வீட்டில் இருந்தே வேலை பார்த்து வருகிறார். கடந்த சில நாள்களாகவே அவர் தனது வீட்டில் இருந்து வேலை பார்த்து வந்தார். அவர் தனது அலைபேசி மூலம் மடிக்கணினிக்கு இணையதள வசதியை ஏற்படுத்தி வேலை பார்த்து வந்தார். ஆனால் அவருக்கு சரியாக ‘சிக்னல்’ கிடைக்கவில்லை. இதனால் அவரால் குறிப்பிட்ட நேரத்தில் தனது வேலையை முடிக்க முடியாமல் அவதி அடைந்தார்.இந்த நிலையில் அவர் தனது கிராமத்தையொட்டிய காட்டுப்பகுதிக்கு வந்து அங்கு சிக்னலும், இணையதள வசதியும் கிடைக்கிறதா என்று பார்த்தார். அந்த பகுதியில் சிக்னல் கிடைத்தது. இதையடுத்து அவர் அங்கேயே ஒரு கூடாரம் அமைத்து மடிக்கணினியுடன் அமர்ந்து வேலை பார்த்தார்.

கோவை

## ‘தினமும் நாய்களுக்கு உணவளிக்கும் தாய்’



வீட்டு வேலை செய்து கிடைக்கும் வருமானத்தில்,கோவையைச் சேர்ந்தவர் சுமதி. சுமார் 100 தெரு நாய்களுக்கு தினமும் உணவளித்து வருகிறார்.

சுமதி மேலும் கூறுகையில்,ஊரடங்குக்கு முன்பு வீட்டு வேலையோடு, ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளில் பாத்திரங்கள் கழுவி வந்தேன். நாளொன்றுக்கு சுமார் 200 லிருந்து 300 ரூபாய் வரை கிடைக்கும். கொரோனா காரணமாக வேலைக்காக வெளியில் எங்கும் செல்ல முடியவில்லை. வீட்டு வேலைக்காக மட்டும் சிலர் அழைக்கின்றனர்.

நாய்களுக்கு உணவளிக்க தினமும் அதிகாலை எழுந்து சோறு எடுத்துச் செல்வேன். கொண்டு செல்லும் உணவுகளை நாய்களுக்கு கொடுத்து விடுவேன்.

வேலை முடிந்து மாலை வீடு திரும்பும் வரை ஏராளமான நாய்கள் அந்தந்த பகுதியில் என்னை பின் தொடர்ந்து கொண்டே இருக்கும். இதற்காக குடியிருப்புவாசிகள் பலர் என்னை திட்டியுள்ளனர்.

பணம் சேர்த்து வைக்க வேண்டுமென எனக்கு என்றும் தோன்றியதில்லை. மகளுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்து, திருமணம் முடிக்க வேண்டும். வருமானம் இல்லாததால் நான்கு மாதங்களாக வீட்டு வாடகை கொடுக்கவில்லை. அதை எங்காவது வேலை செய்து வரும் பணத்தில் கொடுத்துவிடுவேன். எக்காரணம் கொண்டும் நாய்களுக்கு உணவு அளிப்பதை நிறுத்த மாட்டேன்’ என்கிறார் சுமதி.



அவுஸ்திரேலியா

# இலங்கைச் சிறுமி வைத்தியசாலையில்

## அழுத்தத்தை எதிர்கொள்ளும் ஆஸி.

அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் உயிருக்கு ஆபத்தான நோய் ஒன்றுடன், இலங்கை தமிழ் அகதி தம்பதிக்கு, அங்கு பிறந்த சிறுமி போராடுகிறாள்.

குறித்த சிறுமியின் குடும்பத்தை மீளக் குடியமர்த்தும் நீண்ட கால வழக்கில் நடவடிக்கை எடுக்குமாறு, ஆஸி. அரசாங்கத்துக்கு அகதிகளின் வழக்கறிஞர்கள் அழுத்தம் வழங்குகையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிறிஸ்மஸ் தீவிலுள்ள அகதிகள் தடுப்பு நிலையம் ஒன்றில் இருந்தே மூன்று வயதான தருணிகா முருகப்பன் எனும் சிறுமி, கடந்த திங்கட்கிழமை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார். சிகிச்சையளிக்கப்படாத நியூமோனியாவுடன் தொடர்புபட்ட இரத்த தொற்று ஒன்றுக்கு உள்ளான இரண்டு வாரங்களுக்கு பின்னரே சிறுமி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

தருணிகாவுடன் வைத்தியசாலைக்கு அவரது தாயார் பிரியாவும் சென்றுள்ள நிலையில், தருணிகாவின் தந்தை நடேசலிங்கமும், மூத்த சகோதரி கோபிகாவும் கிறிஸ்மஸ் தீவிலுள்ள தடுப்பு நிலையத்திலேயே உள்ளனர்.

இந்நிலையில், வைத்தியசாலைக்கு தருணிகாவை எடுத்துச் செல்ல கிறிஸ்மஸ் தீவிலுள்ள மருத்துவப் பணியாளர்கள் மீண்டும் மீண்டும் மறுத்ததாக பிரியா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த குடும்பத்தை அவுஸ்திரேலியாவில் அனுமதிப்பதை எதிர்பார்க்கவில்லை என அந்நாட்டு வெளிநாட்டமைச்சர் மரிஸோ பெய்ன் தெரிவித்துள்ளார்.


குறித்த குடும்பமானது, அவர்களின் வீட்டில் 2018ஆம் ஆண்டு குடிவரவு அதிகாரிகளால் அதிகாலையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் திடீரென வெளியேற்றப்பட்டிருந்தது.

படகின் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு 2012, 2013ஆம் ஆண்டு சென்ற நடேசலிங்கவும், பிரியாவும் அங்கு சந்தித்து திருமணம் செய்து கொண்டனர்.

இந்நிலையில், 2019ஆம் ஆண்டு இக்குடும்பத்தை நாடு கடத்தும் முயற்சியானது மத்திய நீதிமன்ற நீதிபதியொருவரின் இடைக்காலத் தடையால் தகர்ந்து, இலங்கை வரவிருந்த இவர்களின் விமானம் டர்வினில் தரையிறங்கியிருந்தது.

பிரான்ஸ்

# முகத்தில் அறை வாங்கிய ஜனாதிபதி



தென் கிழக்கு பிரான்ஸுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றின்போது, அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் கன்னத்தில் அறையப்பட்டுள்ளார்.

சமூக வலைத்தளத்தில் உலா வரும் காணொளி ஒன்றில், வேலியொன்றுக்கு அருகில் ஜனாதிபதி மக்ரோன் செல்லும்போது, அவருக்கு நபரொருவர் அறைகின்றார்.

இச்சம்பவத்தையடுத்து, இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சீனா

# அதிபரை பணய கைதியாக்கிய மாணவர்கள்

ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள், பாடசாலை அதிபர் ஒருவரை, பட்டங்கள் மதிப்பிழக்கச் செய்யப்படும் என்ற அச்சத்தில் தடுத்து வைத்திருந்ததாக சீனப் பொலிஸார், நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

ஜியாங்சு மாகாணத்திலுள்ள நன்ஜிங் கல்லூரியை தொழில் நிறுவகமொன்றுடன் இணைப்பதற்கு எதிராகவே ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

பொலிஸார் மிளகு ஸ்பிறேயை பிரயோகித்ததிலும், பொல்லுகளைப் பயன்படுத்தியதிலும் சில மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

சீனாவில் ஒன்றுகூடல்கள் கட்டுப்படுத்தப்படுகையில், இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் அரிது ஆகும்.



ஐ. அமெரிக்கா

# பாதிப்பிலிருந்து மீண்ட இணையத்தளங்கள்




அமெஸொன், றெடிட், டுவிச் உள்ளடங்கலான பெரிய இணையத்தளங்ளை பாரிய சிக்கல் ஒன்று பாதித்திருந்தது.

பிரித்தானிய அரசாங்க இணையத்தளமும், பினான்ஷியல் டைம்ஸ், கார்டியன், நியூ யோர்க் டைம்ஸும் செயலிழந்திருந்தன.

பல இணையத்தளங்களின் பின்னாலுள்ள கிளவுட் வழங்கியான பாஸ்ட்லியே இப்பிரச்சினைகளுக்கு பின்னாலுள்ளதாகத் தெரிவித்திருந்தது.

நேற்று முன்தினம் மாலையில் ஏற்பட்ட குறித்த பிரச்சினைகள், ஒரு மணித்தியாலம் வரை நீடித்திருந்தன.

சி.என்.என், பேபல், பி.பி.சி, விமோ போன்ற இணையத்தளங்களும் பாதிப்பை எதிர்நோக்கியிருந்தன.

பங்களாதேஷ்

# டிக் டொக்கில் பாலியல் வியாபாரம்

## ஆட்கடத்தல் குழு உறுப்பினர் 11 பேர் கைது



பங்களாதேஷ் ஆட்கடத்தல் குழுவொன்றின் உறுப்பினர்களெனச் சந்தேகிக்கப்படுகின்ற குறைந்தது 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, அந்நாட்டுத் தலைநகர் டாக்கா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குழுவானது அயல் நாடான இந்தியாவின் பாலியல் வியாபாரத்துக்குள் டிக் டொக்கைப் பயனப்படுத்தி, சிறுமிகளையும், யுவதிகளையும் உள்ளீர்த்துள்ளது.

டிக் டொக் மொடல்களாக மாற்றுவதாகக் கூறியே யுவதிகள் உள்ளீர்க்கப்பட்டதாக பங்களாதேஷின் விரைவு நடவடிக்கை பற்றாலியன் துணை பொலிஸ் பிரிவு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும்

# மத்தியூஸ் புறக்கணிப்பு



இலங்கை கிரிக்கெட் அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான இங்கிலாந்து சுற்றுப் பயணத்துக்கான குழாமிலும் இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் இடம்பெறவில்லை.

இதேவேளை, 24 பேர் கொண்ட குறித்த குழாமில் அறிமுக சகலதுறை வீரர்களான தனஞ்சய லக்ஷனும், சரித் அஸலங்கவும், இஷான் ஜயரத்னவும் இடம்பெற்றதுடன், டெஸ்ட் போட்டியில் அண்மையில் அறிமுகத்தை மேற்கொண்ட சுழற்பந்துவீச்சாளர் பிரவீன் ஜெயவிக்கிரமவும் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், வேகப்பந்துவீச்சாளர் நுவான் பிரதீப்பும், துடுப்பாட்டவீரர் அவிஷ்க பெர்ணான்டோவும் குழாமுக்குத் திரும்பியுள்ள நிலையில், துடுப்பாட்டவீரர் அஷேன் பண்டார குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: குஷல் பெரேரா, குஷல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக, அவிஷ்க பெர்ணான்டோ, பதும் நிஸங்க, நிரோஷன் டிக்வெல்ல, தனஞ்சய டி சில்வா, ஒஷாத பெர்ணான்டோ, சரித் அஸலங்க, தசுன் ஷானக, வனிடு ஹஸரங்க, ரமேஷ் மெண்டிஸ், சாமிக கருணாரத்ன, தனஞ்சய லக்ஷன், இஷான் ஜயரத்ன, துஷ்மந்த சமீர, இசுரு உதான, அசித பெர்ணான்டோ, நுவான் பிரதீப், பினுர பெர்ணான்டோ, ஷிரான் பெர்ணான்டோ, லக்ஷன் சந்தகான், அகில தனஞ்சய, பிரவீன் ஜெயவிக்கிரம.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# சமநிலையில் சிலி பொலிவியா போட்டி



அடுத்தாண்டு நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளில், சிலியில் நேற்றுக் காலை நடைபெற்ற அவ்வணிக்கும், பொலிவியாவுக்குமிடையிலான போட்டி, 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

சிலி சார்பாகப் பெறப்பட்ட கோலை எரிக் புல்கர் பெற்றதோடு, பொலிவியா சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்செலோ மொரேனோ பெற்றிருந்தார்.

இதேவேளை, வெனிசுவேலாவில் நடைபெற்ற அவ்வணிக்கும், உருகுவேக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.


இந்நிலையில், கொலம்பியாவில் நடைபெற்ற அவ்வணிக்கும், ஆர்ஜென்டீனாவுக்குமிடையிலான போட்டியானது, 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. ஆர்ஜென்டீனா சார்பாக, கிறிஸ்டியன் றொமேறோ, லியன்ட்ரோ பரெடெஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். கொலம்பியா சார்பாக, லூயிஸ் முரியெல், மிகேல் பொர்ஜா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடர்:

# சிட்டிபாஸிடம் தோற்றது மெட்வெடெவ்

பிரெஞ்சுத் தலைநகர் பரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, உலகின் நான்காம் நிலை வீரரான டனில் மெட்வெடெவ் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை நடைபெற்ற தனது காலிறுதிப் போட்டியில், உலகின் ஐந்தாம் நிலை வீரரான கிரேக்கத்தின் ஸ்டெபனோஸ் சிட்டிபாஸை எதிர்கொண்ட ரஷ்யாவின் மெட்வெடெவ், 3-6, 6-7 (3-7), 5-7 என்ற நேர் செட்களில் தோற்று தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.



டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பிக்கிறது:

# தென்னாபிரிக்காவை வீழ்த்துமா மேற்கிந்தியத் தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, சென். லூசியாவில் இன்றிரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணிகளின் தரவரிசையில் ஆறாமிடத்தில் மேற்கிந்தியத் தீவுகளும், ஏழாமிடத்தில் தென்னாபிரிக்காவும் காணப்படுகின்றது.

இந்நிலையில், இத்தொடரை வென்றால் ஆறாமிடத்துக்கு தென்னாபிரிக்கா முன்னேற, ஏழாமிடத்துக்கு மேற்கிந்தியத் தீவுகள் கீழிறங்கும். மாறாக, தொடரை தென்னாபிரிக்கா இழந்தால் எட்டாமிடத்துக்கு கீழிறங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



பந்துவீச்சைப் பொறுத்த வரையில் இரண்டு அணிகளும் சமபலத்தை உடையவையாக காணப்பட்டாலும், டீன் எல்கர் தலைமையிலான தென்னாபிரிக்காவின் புதிய டெஸ்ட் அணி, தெம்பா பவுமா, குயின்டன் டி கொக், றஸி வான் டர் டுஸனை உள்ளடக்கி துடுப்பாட்டத்தில் பலமானதாகக் காணப்படுகின்றது.


இங்கிலாந்து எதிர் நியூசிலாந்து:

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது, பேர்மிங்ஹாமில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், தொடரைத் தீர்மானிக்கும் போட்டியாக குறித்த போட்டி அமைகின்றது.

இங்கிலாந்து அணியில் கடந்த போட்டியில் விளையாடிய ஒலி றொபின்ஸன் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், அவரை கிரேய்க் ஒவெர்ட்டன் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதோடு, ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டூவர்ட் ப்ரோட்டுக்குப் பதிலாக ஜேக் லீச், ஒலி ஸ்டோன் ஆகியோர் விளையாடும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.



நியூசிலாந்து அணியில் காயம் காரணமாக மிற்செல் சான்ட்னெர் விளையாட முடியாமல் போயுள்ள நிலையில் அவருக்குப் பதில் அஜாஸ் பட்டேல் விளையாடுவார் என்பது எதிர்பார்க்கப்படுவதோடு, உபாதைக்குள்ளான அணித்தலைவர் கேன் வில்லியம்ஸனை வில் யங் பிரதியிடுவார் எதிர் எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, வேகப்பந்துவீச்சாளர்கள் டிம் சௌதி, கைல் ஜேமிஸன் ஆகியோரை ட்ரெண்ட் போல்ட், மற் ஹென்றி ஆகியோர் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 10 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.